V9T

**விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**காலாண்டு பொதுத்தேர்வு - 2023**

-----

**வகுப்பு 9**

கால அளவு: 3.00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 100

**பகுதி - I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15×1=15**

**சரியான விடையைத் தெரிவு செய்து குறியீட்டுடன் விடையையும் எழுதுக.**

1) தமிழ்விடு தூது ............ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.

அ) செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) உலகத் தாய்மொழி நாள் .........

அ) பிப்ரவரி 8 ஆ) பிப்ரவரி 16 இ) பிப்ரவரி 25 ஈ) பிப்ரவரி 21

3) செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை ............

அ) தன்வினை ஆ) உடன்பாட்டுவினை

இ) செய்வினை ஈ) பிறவினை

4) ‘மிசை’ - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

5) நம்பியாண்டார் நம்பியால் பாடப்பட்ட நூல் ........... எனப்படும்.

அ) திருத்தொண்டர் தொகை ஆ) திருத்தொண்டர் திருவந்தாதி

இ) பெரிய புராணம் ஈ) திருவாசகம்

6) ............ அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன.

அ) கீழடி ஆ) பல்லாவரம்

இ) அரிக்கமேடு ஈ) ஆதிச்சநல்லூர்

7) உலக பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல்

அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம்

இ) புறநானூறு ஈ) மணிமேகலை

8) கள்ளிக்காட்டு இதிகாசம் படைத்தவர் ............

அ) கவிஞர் வாலி ஆ) கவிஞர் வைரமுத்து

இ) கவிஞர் மேத்தா ஈ) கவிஞர் காசி

9) தொல்காப்பியம் ............ அதிகாரங்களையும், ........... இயல்களையும் பெற்றுள்ளது.

அ) 3, 27 ஆ) 3, 21 இ) 3, 13 ஈ) 2, 27

10) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு

ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித்தொகை தேர்வு

ஈ) மூன்றும் சரி

11) விகாரப் புணர்ச்சி ............ வகைப்படும்

அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஐந்து

12) மணிமேகலை ............ முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம்

அ) வீரத்தை ஆ) பெண்மையை இ) துன்பத்தை ஈ) வணிகத்தை

13) உறுபொருள் - இலக்கணக்குறிப்பு தருக.

அ) உரிச்சொல்தொடர் ஆ) வினைத்தொகை

இ) உருவகம் ஈ) பண்புத்தொகை

14) பொருத்தமான பெயரடை தருக.

எல்லாருக்கும் .......... வணக்கம்

அ) நல்ல ஆ) பெரிய இ) இனிய ஈ) கொடிய

15) துகலம் - பொருள் தருக.

அ) நுட்பமான ஒலி ஆ) மின்னல் இ) இடி ஈ) இரைச்சல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி.** **4×2=8**

**21-வது வினாவிற்கு கட்டாயம் விடை தர வேண்டும்.**

16) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

17) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.

18) ஏறுதழுவுதல் நிகழ்வுக்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களை குறிப்பிடு.

19) கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

20) கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

21) விடல் - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி.** **5×2=10**

22) **தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க.**

அ) சனி நீராடு என்பது ஔவையின் வாக்கு

ஆ) உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும்.

23) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

24) **ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.**

எண்ணெய் ஊற்றி ............ விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு ..............

25) **பிரித்து எழுதுக.**

அ) வழிந்தோடும் ஆ) நீரில்லாமல்

26) **பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்துக.**

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ................ மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில பொதுப்பண்புகளைப் (பெறு) ..........

27) 'வா' - என்னும் துணைவினையைப் பயன்படுத்தி புதிய தொடர் எழுதுக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **2×3=6**

28) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

29) ஏறு தழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

30) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

முல்லை நில மக்களின் பண்பாட்டு அடையாளமாக ஏறுதழுவுதல் திகழ்கிறது. ஏறு தழுவுவதற்கு முன் தெய்வங்களை வழிபடுவர். திமில் பெருத்த காளைகள் நிலத்தின் நீரை வெளிக் கொண்டு வருவது போல முட்டின. சில தம்முள் முரண்பட்டு

ஒன்றையொன்று எதிர்த்துப் போரிட்டன.

அ) முல்லை நில மக்களின் பண்பாட்டு அடையாளம் எது?

ஆ) ஏறு தழுவுவதற்கு முன் மக்கள் என்ன செய்வர்?

இ) காளைகள் தம்முள் முரண்பட்டு என்ன செய்தன?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** 2×3=6

**33-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

31) 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

32) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33) 'தித்திக்கும் . . . . ' எனத் தொடங்கி 'மண்ணில்' என முடியும் தமிழ்விடு தூது பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2×3=6

34) 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்' . -இக்குறளின் அணியைச் சுட்டி விளக்குக.

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) சந்தையில் பொருட்கள் வாங்கும் போது உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 5×5=25

37) உங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் நடைபெறவிருக்கும்.
உலகத் தாய்மொழிநாள் விழாவுக்கு நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.

(அல்லது)

உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவுக்கு அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.

38) 'விமான நிலையத்தில் நான்' - கற்பனை கலந்து எழுதுக.

(அல்லது)

உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால்முளைத்த கதைகள்' - என்னும் நூல் குறித்த கருத்துக்களை கடிதமாக எழுது.

39) **காட்சியை கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.**



40) **பின்வரும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து நயம் பாராட்டுக.**

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்

- கவிமணி

41) அ) வகுப்பறையில் உன் பொறுப்புகள் ஐந்தினை எழுதுக.

**(அல்லது)**

அ) பொன் மொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக.

1. Every flower is a soul blossoming in nature - De Nerval.
2. Sunset is still my favourite colour and rainbow is second. - Mattie
3. An early morning walk is a blessing for whole day - Henry David
4. Winners don't do different things:
   They do things differently - Shiv Khera.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக.** **3×8=24**

42) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

43) அ) தண்ணீர் கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

44) அ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

- - - - - -